# ஏப்ரல்- 17- திங்கள்

**புனித அனிசேத்துஸ்**

**“அஞ்சாதீர்கள்!”(மத் 28:10)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 14, 22 –23

பேற்தகொஸ்தே நாளில் பேதுரு பதினொருவருடன் சேர்ந்து, எழுந்து நின்று, உரத்தக் குரலில் அவர்களிடம் பின்வருமாறு கூறினார் “யூத மக்களே, எருசலேமில் வாழும் மக்களே, இதைத் தெரிந்துக்கொள்ளுங்கள். எனது சொற்களைக் கவனித்துக் கேளுங்கள். இஸ்ரயேல் மக்களே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்.கடவுள் நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்லசெயல்களையும் அருஞ்செயல்களையும் அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக் காண்பித்தார். இது நீங்கள் அறிந்ததே.கடவுள் தாம் வரையறுத்துள்ள திட்டத்தின்படியும், தம் முன்னறிவின்படியும் இந்த இயேசுவை உங்கள் கையில் விட்டுவிட்டார். நீங்கள் திருச்சட்டம் அறியாதார் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்துகொன்றீர்கள்“ என்றார்.

**பதில்பாடல் :** இறைவா என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்

## நற்செய்தி : மத்தேயு 28 : 8 – 15

அக்காலத்தில் கல்லறையைக் காணவந்த பெண்கள் கல்லறையைவிட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், ”அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்” என்றார். அவர்கள் போய்க்கொண்டிருந்த போது காவல் வீரருள் சிலர் நகரத்திற்குள் சென்று, நிகழ்ந்தவை யாவற்றையும் தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து அப்படை வீரருக்கு மிகுதியாகப் பணம் கொடுத்து, ”நாங்கள் தூங்கிக் கொண்டிருந்த போது இயேசுவின் சீடர் இரவில் வந்து அவரது உடலைத் திருடிச் சென்றுவிட்டனர்” எனச்சொல்லுங்கள். ஆளுநர் இதைக் கேள்வியுற்றால் நாங்கள் அவரை நம்பச்செய்து நீங்கள் தொல்லைக்கு உள்ளாகாதபடி பார்த்துக்கொள்வோம்” என்று அவர்களிடம் கூறினார்கள். அவர்களும் பணத்தைப் பெற்றுக்கொண்டு தங்களுக்கு அவர்கள் சொல்லிக் கொடுத்தவாறே செய்தார்கள். இந்நாள் வரை இந்த வதந்தி யூதரிடையே பரவியிருக்கிறது.

**தியானம்:** யேசுவின் உயிர்ப்பு உலகிற்கு ஒரு வரலாறு. நீதிக்கு கிடைத்த வெற்றி. மரணத்திற்கு அடிகப்பட்ட சாவுமணி. காட்டிக் கொடுத்த யூதாசுக்கோ புதைகுழி. அனியாயத் தீர்ப்பிட்டவர்களிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல். துன்புறுத்தியவர்களுக்கு கொடுக்கப்பட்ட சாட்டை அடி. பிலாத்துவிற்கு அணிவிக்கப்பட்ட முள்முடி. மறுதலித்த பேதுருவிற்கு அளிகப்பட்ட புத்துணர்ச்சி. யேசுவை கல்லறைகளால் கூட தடுத்து நிறுத்த முடியவில்லை. ஏனெனில் இறந்தோர் வாழும் இடம்தான் கல்லறை. உயிரோடு இருப்பவர் எப்படி கலறையில் இருக்கலாம். நம்ப முடியாத அதிசயம் ஒன்று அரங்கேறியுள்ளது. யேசுவின் உயிர்ப்பு நமக்கு தரும் செய்தி என்ன? நீதியை, அன்பை, கருணையை, இரக்கத்தை, மன்னிப்பை, தாழ்ச்சியை யாராலும் குழிதோண்டி புதைக்க முடியாது, புதைத்தாலும் அது விருட்சமாக உரு எடுக்கும். நாம் மண்ணிலே புதையுண்டு போனவர்களா? அல்லது வேரூன்றி நிற்கும் விருட்ச்சமா?